28th September 1955]

Sri N. K. PALANISAMY : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிகப்படியான பணம் வேண்டியதாக இருக்கிறது. ஆகவே ஜமீந்தார்களுக்கும் இனாம்தார்களுக்கும் பணம் கொடுக்க வேண்டியதற்கு பதிலாக அவர்களுக்கு 30 வருஷம் கழித்து பணம் கொடுப்பதாக பாண்டுகள் எழுதிக் கொடுக்க சர்க்கார் ஆலோசனை செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தப் பிரச்னையைப்பற்றி வெகு தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. ரிவினியூ போர்டிலிருந்து அதைப்பற்றிய ரிபோர்ட்டு வெகு சீக்கிரத்தில் வரும். அது வந்த பிறகு அதை கவனிக்கப்படும்.

Sri M. S. SELVARAJAN : ஸார், பலவித லோகல் டெவலப்மெண்ட் வேலைகளை பல இடங்களில் எடுத்து நடத்துகிறார்கள். அங்கெல்லாம் இனாம் நிலங்கள் குறுக்கிடுகின்றன. அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பிரச்னை எழுந்தால் நஷ்ட ஈட்டை அங்குள்ள கிராமத்தார் கொடுக்க தயாராக இருக்கிறார்கள். அந்த நிலங்களை சர்க்கார் எடுத்துக் கொண்டு உடனடியாக லோகல் டெவலப்மெண்ட் வேலைகளைச் செய்வதற்கு ஏதாவது உதவி செய்ய சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அதைப்பற்றிய ரிபோர்ட் சீக்கிரம் வர இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்த பிறகு கனம் அங்கத்தினர் சொன்ன யோசனையையும் கவனிக்கலாம்.

Sri K. V. RAMASWAMI : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது (Constitution) கான்ஸ்டிடியூஷன் மற்றும் அது, இது எல்லாம் இருக்கிறது என்று பதில் சொன்னார். அது, இது என்றால் என்ன என்பது புரியவில்லை. அதை விளக்குவாரா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : நான் சொன்னதெல்லாம் கனம் அங்கத்தினருக்கு நன்றாகப் புரிந்திருக்கிறது. ஏதோ கேள்வி கேட்க வேண்டுமென்பதற்காக தமாஷாவாக கேட்கிறார்.

Notifying of Erumanur village under the Zamin Abolition Act

* 2476 *Q.*—Sri P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) when Erumanur village, South Arcot district, was notified to come under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948;

(*b*) the amount fixed by the Government and collected from the ryots after the notification;

(*c*) whether the village has been surveyed and the kist settled for the village and if so, when;

(*d*) on what basis the basic annual sum was fixed for the purpose of awarding compensation to the landholders; and

(*e*) what the basic sum was?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) to (*e*) The answer[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on page 445 infra.